# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## அவசரக் கூட்ட அறிவிப்பு

22.06.2018–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

---

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**

தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

## பொருட்கள்

குறள் :

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

083. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 34,449 தற்போதைய மக்கள்தொகை மற்றும் இந்நகருக்கு வந்து செல்லும் மக்கள் (Floating Population) தொகையால் இந்நகரில் தினமும் சுமார் 13 மெட்ரிக் டன் அளவிற்கு திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இத்திடக்கழிவுகள் தற்பொழுது எச்சூர் கிராமத்தில் உள்ள உரக்கிடங்கில் ( சுமார் 4.16 ஏக்கர்) கொட்டப்பட்டுவருகிறது. தற்பொழுது நகராட்சியில் உள்ள 23 தள்ளுவண்டிகள், 1 மூன்று சக்கர வண்டிகள் மூலம் சுமார் 90% வீடுகளில் திடக்கழிவுகள் மக்கும் மக்காத குப்பைகள் எனப்பிரித்து வாங்கப்படுகிறது. நகரில் உருவாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய திடக்கழிவுகளில் பிளாஸ்டிக், ரப்பர், பிளாஸ்டிக் பாட்டில்கள், துணிகள், தேங்காய் ஓடுகள் மற்றும் மரங்கள் ஆகியவற்றினை கையாளுவதிலும் மேலும் அப்புறப்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. இவற்றினை பாதுகாப்பாக கையாண்டு வெளியேற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 11.05.2018 அன்று நடைபெற்ற ஆய்வுகூட்டத்தில் ஆலோசித்தபோது மேற்கண்ட எரியக்கூடிய தன்மை வாய்ந்த திடக்கழிவுகளை கடலூர் மாவட்டத்தில் உள்ள 5 நகராட்சிகளும் ( கடலூர், பண்ருட்டி, நெல்லிக்குப்பம், சிதம்பரம் மற்றும் விருத்தாச்சலம் ) அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் எரிபொருளாக பயன்படுத்துவதற்காக வழங்குவதால் அந்நிறுவனத்துடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கலாம் எனத்தெரிவித்ததை தொடர்ந்து மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பேசியபோது நாளொன்றுக்கு 250 மெட்ரிக் டன் எரியக்கூடிய திடக்கழிவுகளை கையாளக்கூடிய அளவில் தங்களிடம் திறன் இருப்பதாகவும் இதுசம்பந்தமாக அந்நிறுவனத்துடன் 10 ஆண்டுகாலத்திற்கு எரியக்கூடிய திடக்கழிவுகளை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட நகராட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டால் திடக்கழிவுகளை நகராட்சியின் செலவில் நகராட்சி வாகனங்களில் ஏற்றி அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் வந்து தர வேண்டும் எனவும் மேற்கண்ட எரியக்கூடிய திடக்கழிவுகளை நகராட்சி இலவசமாக தரவேண்டும் எனவும் நிபந்தனை தெரிவித்தனர். இதுசம்பந்தமான மாதிரி புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையும் கொடுத்துள்ளனர்.

வந்தவாசி நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய 2 மெ.டன் திடக்கழிவுளை கையாளுவதும் அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் பல்வேறு சிரமங்கள் உள்ளன. எனவே அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றிட மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிறுவனத்துடன் 10 ஆண்டுகாலத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளவும் அதற்காக விலையேதும் இல்லாமல் இலவசமாக

இத்திடக்கழிவுகளை நகராட்சி சொந்த பொறுப்பில் இந்நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. வந்தவாசி நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் எரியக்கூடிய தன்மையுள்ள திடக்கழிவுகளை கையாளுவதிலும் மற்றும் பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி வாகனத்தில் கொண்டு சென்று வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

2. பத்தாண்டு காலத்திற்கு அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு திடக்கழிவுகளை வழங்குவதற்கு அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 0971 / 2018 /எச்1**

**நாள் 22.06.2018**

**(அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது)**

084. வந்தவாசி நகராட்சியில் தணிக்கை 2016–2017ம் ஆண்டு தணிக்கை நடைபெற்றப்போது தணிக்கைக்கு தேவையான ஆவணங்கள் அவசரம் அவசியம் கருதி ஜெராக்ஸ் மற்றும் பைண்டிங் செய்துக்கொண்டமைக்கு உண்டான செலவினத்தொகை ரூ.22,000/– (இருபத்தி இரண்டாயிரம்) மட்டும் வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி தணிக்கை க்கு தேவையான ஆவணங்கள் ஜெராக்ஸ் மற்றும் பைண்டிங் செய்த வகையில் ரூ.22,000/– வழங்கிட மன்றம் ஒப்புதல் வழங்குதல்.

**(அனுமதிக்கப்பட்டது)**

085. வந்தவாசி நகராட்சியில் நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.ஆர்.கோவிந்தன் அவர்கள் இந்நகராட்சியில் செய்து முடிக்கப்பட்ட பணிகளில் பிடித்தம் செய்த பணிதரக்காப்புத் தொகை கீழ்வரும் விவரத்தில் கண்டவாறு ரூ.64750/–ஐ திரும்பத்தர கேட்டு விண்ணப்பித்துள்ளதின் பேரில் அன்னாருக்கு தொகை ரூ.64750/–திரும்பத்தருதல் குறித்து மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | டேவணிப்பதிவேடு வரிசை எண். | டேவணித்தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | பொதுநிதிப்பணி MKI காம்பளக்ஸ் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 817 | 8300.00 |
| 2 | 21வது வார்டு கஸ்தூரிபாய் தெரு சிமெண்ட்சாலை பணி | 1530 | 2500.00 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 8வது வார்டு கவரைதெருவில் கால்வாய் கட்டியது | 1531/ஏ | 2500.00 |
| 4 | 8வது வார்டு பாலுடையார் தெரு சிறுபாலம் கட்டியது | 1542 | 1000.00 |
| 5 | 12வது வார்டு காதர்ஜண்டா தெருவில் அங்கன் வாடி கட்டிடம் கட்டியது | 1543 | 4000.00 |
| 6 | 3வது வார்டு பள்ளியின் பின்புறம் மழைநீர்கால்வாய் கட்டியது | 1557 | 2500.00 |
| 7 | வார்டு–18ல் பெரியகாலனி பகுதியில் BRGF திட்டத்தில் கால்வாய் கட்டியது. | 1578 | 3050.00 |
| 8 | 4வது வார்டு பிள்ளையார் கோயில் தெருவில் இரண்டு பக்கம் கால்வாய் கட்டியது | 1585 | 4000.00 |
| 9 | சுகநதி கரையில் திறந்தவெளி கிணறு அமைத்தது | 1593 | 9700.00 |
| 10 | புஷ்கார்டு சப்ளை செய்தது | 1611 | 7200.00 |
| 11 | நகராட்சி பகுதிகளில் குடிநீர் பைப்லைன் உடைப்புகள் சரிசெய்து தருதல்பணி | 1612 | 6000.00 |
| 12 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சிறுமின்விசை பம்புகள் மற்றும் கைப்பம்புகள் பராமரித்தல் பணி | 1618 | 5000.00 |
| 13 | 13வது வார்டு நாராசந்து தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி. | 1619 | 9000.00 |

அலுவலககுறிப்பு–

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 233 /2018/இ1, நாள். )

(பதிவு செய்யப்பட்டது)

086. வந்தவாசி நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவைப்படும் எழுதுபொருட்கள் பதிவேடு மற்றும் பிறப்பு இறப்பு படிவங்கள் அனைத்தும் 2018–2019ம் ஆண்டிற்கு தேவைப்படும் (Stationary Item) வாங்க அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான நேப்கோ பிரிண்டிங், வேலூர் மற்றும் ஜார்ஜ் மைக்கேல் டவுன், மல்டிபர்பஸ், சென்னை ஆகிய நிறுவனத்தில் வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம், அவசியம் கருதி நகர்மன்ற தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1262/2018/இ1)

(அனுமதிக்கப்பட்டது)

086A.வந்தவாசி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடங்களில் நீர் வரும் வெளியேறும் மற்றும் கழிவுநீர் குழாய்கள் சேதமடைந்து, கழிவறை பகுதியில் 10 செமீ உயரம் கழிவு நீர் பிடிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் துர்நாற்றம் மற்றும் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது. உடனடியாக சீரமைக்க வேண்டியுள்ளதால், 1920 நகராட்சி சட்டம் பிரிவு 15–ன் பணி மேற்கொள்ளப்பட்டது. மொத்த மதிப்பீட்டுத்தொகை ரூ.2.50 இலட்சங்கள், மொத்த பணிமேற்கொண்ட மதிப்பு ரூ.2,24,343/– GST பிடிமானம் அல்லாத மற்றபடி பிடிமானங்கள் போக ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட தொகை ரூ.2,04,093/– மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.234/2018/இ1) (அனுமதிக்கப்பட்டது)

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
வந்தவாசி நகராட்சி